தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 4.] MADRAS:—SUNDAY JANUARY, 23, 287. A. S. [Monthly, 4 Annas.

சோல்லுகசோல்லைப்பிறிதோர்சோலச்சோல்லை
வேல்லுஞ்சோலின்மையறிந்து.—குறள்.

திருஷ்டிசாஸ்திரம்.	சடிதம்.
முக்கியபோதனை.	லௌகிகம்.
அவலட்சணபிரேஷகம்.	வர்த்தமானம்.

திருஷ்டிசாஸ்திரம்.

திருஷ்டிசாஸ்திரமென்பது ஒளியின் குணங்களையும் ஒரு கண்ணாலாவது இரண்டு கண்களாலுமாவது, பார்த்தலாகிய தொழிலின் தன்மையையும், அதைச் சேர்ந்த விதிகளையும், தெரிவிக்கிற ஒரு நூலாக இருக்கிறது. ஒளியானது, வஸ்துக்களினின்றும் புறப்பட்டு (நம்முடைய கண்ணுக்குள் புகுந்து) அவைகளைநாம் பார்ப்பதற்குக் கருவியாகிற ஒருபதார்த்தம், கண்ணுக்கு விஷயமான பதார்த்தங்கள் எல்லாவற்றையும் இருவகையாகப் பிரிக்கலாம்; தம்மொளியால் விளங்குவன வென்றும், பிறவற்றி னொளியால் விளங்குவன வென்றும். அசுவனிமுதலான நட்சத்திரங்கள், பலவிதமான சோதிகள், இவைகளெல்லாம் தம்மொளியால் விளங்குவன. இவைகளை நாம் பார்ப்பதற்குக் கருவியான ஒளியானது இவைகளினிடத்திலேயே உண்டாய் வருகிறது. சந்திரன், சுக்கிரன, சனிமுதலான கிரகங்களும், மண், கல், மரம், செடி முதலியவைகளும், பிறவற்றின் ஒளியால் விளங்குவன. அவைகளினின்றும் நம்மிடத்திற்கு வருகிற ஒளியானது அவைகளிலேயே உண்டானதல்ல. சூரியன், விளக்கு முதலியவற்றினின்றும், புறப்பட்டு சந்திரன் முதலியவற்றின்மேல் விழுந்து அங்கிருந்து திரும்பி நம்மிடத்திற்கு வருவது. பிறவற்றால் விளங்குவதான ஒரு பதார்த்தமானது தன்னைப் போன்ற மற்றொன்றி னின்றும் வருகிற ஒளியைத் தான்பெற்று அதைத் தன்னைப்போன்ற வேறொருபதார்த்தத்தின் மீதுசெலுத்தலாம். ஆனால் எல்லாவிஷயத்திலும் ஒளியானது தன்னொளியால்விளங்குகிற வஸ்துக்களிலேதான் ஆதியில் உண்டாகிப் பரவியிருக்கவேண்டியது. ஒரு வத்தியைக் கொளுத்தி ஒரு இருட்டறையில் கொண்டுவந்தால் எரிகிற விளக்கின் வடிவானது அதினின்றும் வருகிற ஒளியினாலே தெரிகிறது, அந்த அறையில் இருக்கிற மற்ற வஸ்துக்களோவெனில் விளக்கினின்றும் வருகிற ஒளியைத் தாமடைந்து அதையேமறுபடியும் திருப்புதலினால் நம்முடையகண்களுக்கு விஷயமாகின்றன. இன்னும் இதரமான வஸ்துக்கள் தங்களமேலே விளக்கு வெளிச்சம் நேராக விழாமற்போனாலும், இறப்பு சுவர்கள் இவைகளிலிருந்து திரும்புகிற ஒளியினால் கண்ணுக்குத் தெள்படுகின்றன. வஸ்துகள் தம்மொளியினால் விளங்குவனவா யிருந்தாலும், பிறவற்றின் ஒளியால் விளங்குவனவா யிருந்தாலும், தாம் எந்தவர்ணமோ அந்த வர்ணமுள்ள ஒளியையே செலுத்துகின்றன. சிவப்புஜ்வாலையும் பழுக்கக் காய்ந்த வஸ்துவும் சிவப்பான ஒளியையே தருகின்றன. ஒரு சிவப்புத்துணியானது சூரியனிடத்திலிருந்து தான் பெறுகிற வொளி வெண்மையானதா யிருந்தாலும். சிவப்பான ஒளியையே தருகிறது. இருவகைப் பதார்த்தங்களுள்ளும், அவற்றின மேற்புறத்தில் கண்ணுக்கு விஷயமாகும் படியான ஒவ்வொருஸ்தானத்திலிருந்தும் எந்தெந்ததிக்கிலிருந்து அந்தஸ்தானத்தைப் பார்க்கக்கூடுமோ அந்தந்த திக்குகளிலெல்லாம் ஒளியானது செலுத்தப்படுகின்றது.

ஒளியானது ஓடும்போது பாம்புமுதலியவற்றைப்போல் வளையாமல் நேராக ஓடுகின்றது. அப்படி ஓடுகிற நேர்க்கோடு ஒவ்வொன்றிற்கும் ஒளிக்கிரணம் என்றுபெயர். ஒரு இருட்டறையில் சுவரில் மிகவும் நெருக்கமா இருபக்கங்களிலும் தெரியும்படி ஓர் துளைசெய்தால், சூரியன் ஒளியானது அத்துளைவழியாக வந்து சூரியனுக்கு நேரொதிராயிருக்கிற ஓரிடத்தில்விழும். அந்த ஒளி விழுகிற இடமும், துளையின் நடுவும், சூரியனுடைய மத்தியும், ஒரே நேர்க்கோட்டிலிருப்பன. அதனால் ஒளிக் கிரணங்கள் நேர்ககோடாகச் செல்வனவென்பது தெளிவாகிறது. ஒளியானது நிமிஷம் - கஉ எ,கருரு0000 மயில் போகிறது. சூரியனிடத்திலிருந்து பூமிக்கு எ௦ - நிமிஷத்தில் வருகிறது. இந்தப் பூமிண்டத்தை ஒரு நிமிஷத்துக்குள், சஅ0 தரம் சுற்றிவருகிற வேகம் அதற்கு இருக்கிறது. ஒளியானது ஒருவஸ்துவின்மேல் விழுந்தால் அதில் சிலபங்கு திரும்பி வந்துவிடுகின்றது. சில்பங்கு வஸ்துவுக்குள்ளே செல்லுகிறது. சிலபதார்த்தங்களில உள்ளேசென்ற ஒளியானது மற்றொருபக்கத்தால் வெளிப்பட்டுப்போகும். சிலபதார்த்தங்களில் உள்ளேயே அயிக்கியமாய்ப்போகும். வஸ்துவின் மேற்புறமானது பொன், வெள்ளி, முதலியவற்றைப்போல சிறிதும் மேடுபள்ளம் இல்லாமல் மழமழவென்றிருந்தால் அதன்மேல் விழுந்த ஒளியில் பெரும்பங்குத் திரும்பிப்போய்விடும். மற்றது வஸ்துவுக்குள்ளே அயிக்கியமாய்விடும். பொன்னையாவது, வெள்ளியையாவது மிகவும் மெல்லிசு தகடாக தட்டினால் உள்ளே புகுந்த வெளிச்சம் மற்றொருபக்கத்தால் வெளிப்படும். கண்ணாடி, தண்ணீர், இவைகளைப்போன்ற வஸ்துக்களில் ஒருபக்கத்தில் வந்துவிழுந்த வெளிச்சத்தில் பெரும்பாலும் மற்றொருபக்கத்தால வெளிப்பட்டுப்போம், சிறிதுமாத்திரம் திரும்பும்.

முக்கியபோதனை.

உலகத்தில் அறிவாளிகளாக இருப்பவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் சித்தத்தை அமைத்து, அதன்பால் நிகழும் தமது சுயாபிப்பிராயத்தோடு விவேகிகளாயுள்ள வேறுபலர்அபிப்பிராயங்களையும் விசாரித்துத் தெளிந்து, கொள்ளற் பாலதைக்கொள்ளவும் தள்ளற்பாலதைத்தள்ளவும் வேண்டும். இவ்வாறுசெய்தல் ஒழிந்து தாம்கேள்வியுற்ற அளவிலே தமது அறிவைச் சிறைப்படுத்தி அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடப்போர் விஷய ஞானமாகிய சுக்கியான சூரியதரிசனம் எக்காலத்துங்காணப்போகின்றதேயில்லை. சுக்கியானசூரியன் உதிக்காத போது அஞ்ஞான இருட்பிழம்பில் ஆழ்ந்து உலகவிகாரப் பிரளயத்தின் சுழலிற்சிக்கி உள்ளநாளளவும் சுகக்கரைகாணாது அறியாமைவசத்தராய் மரியாநிற்பர். பாலுண்ணும் பாலகர்களுக்குப் பாயசமூட்டில் குமட்டிவிடுவதுபோல் பயனறியா நெஞ்சினருக்குப் பயன்இன்னதென நயவாசகமாய்ப்பகரினும் தட்டிவிடுவர். பன்றிக்குப்பாலன்னம் ஊட்டுவதுபோல பயனறியா நெஞ்சினருக்குப் பயனுயவிஷயங்களைப் பகர்தலில் பயனின்றே: இன்னோருக்குப் பயன்பயப்பதாகிய போதனையைப்போதிக்கவேண்டில் முன்னம் அவர்கள் உள்ளத்தைக்கொள்ளைகொண்டிருக்கும் மிருகத்துவத்தைப்போக்கி மானுஷீகத்துவத்தைத் தேக்குதல்வேண்டும். காடும்கரம்பும் கலலும் புல்லும் களரும் அடர்ந்தநிலத்தில் விதைவிதைத்தால் அவ்விதை அடர்பட்டழிதல் நிச்சயமாதலால், முன்னம் அந்நிலக்குற்றத்தை அலக்கழித்துவிடவேண்டியது ஆவசியகம். ஆகையால் அறிவாளிகளுக்கு நன்மார்க்கத்தைப் போதிப்பதைவிட அறிவில்லாருக்குப் போதிப்பதில் இருபதுமடங்கு பிரையாசையுண்டு. அறிவாளி இயற்கையாகவே சகலவிஷயங்களையும் அவாவி உணர்ந்து சமநிலைச்சித்தத்தால் சீர்தூக்கிக் குற்றத்தைக்கைவிட்டு குணத்தைக்கைக்கொள்ளுவன். அறிவாளிக்கு விஷயவிசாரமுள்ளமையால் அவன் எவ்வாற்றானும் நன்மார்க்கத்தைத்தனக்கெட்டிய அளவில்நாடுவன். விசாரசித்தமில்லாத சோம்பற்றுணைவரோ எது எப்படியானால் நமக்கென்ன; எல்லாமறிந்தவர் சாவாதிருப்பதும், ஒனறுமறியாதவர்தான் சாவதும் இல்லையே ? எல்லாம் ஒருநாளைக்குப் போகப்போகிறவர்கள்தானே ; என்றுசதாகாலமும் கும்பிக்கே மிருகாதிகளைப்போல உழைத்து, நன்மார்க்கந் துன்மார்க்கம் நீதி அநீதி ஒன்றுந்தெரியாமல் பிறக்கும் பயன்படாமல் நாளவம்போக்கும் நாமிருகங்களுக்கே முக்கியமாய் நாமெல்லோரும் முயன்று சிறிதுசிறிதாக சுவக்கியான போதகஞ்செய்யவேண்டியது ஆவசியகம்.

——0——

அவலட்சணாபிஷேகம்

ஸ்திரீகள் அந்தப்புரத்தில் மஞ்சனநீராடுகையில் புருஷர்கள் செல்லக்கூடாதென்கிற ஒழுக்கம் மானிடர்க்குமாத்திரமேயலாமல், தேவதைகளுக்கு முண்டென்பது நிச்சயம். பார்வதிமுதலியதேவதாஸ்திரீகள் நீராடுகையில் பாங்கிமார்கள் அருகிருந்து உபசரித்ததாகத் தெரியவருகிறது. சுப்பிரமணியன் சோதிடசாஸ்திரத்தை நூதனமாய்ச்செய்து, சிவனிடத்திற்குக் கொண்டுபோய்ச்சொல்ல; அதைச்சோதிக்கும்பொருட்டு, இப்போது பார்வதியெங்கேயிருக்கிறாளென்று சிவன்கேட்க, ஸ்நானஞ்செய்யத் தடாகத்திற்குப் போயிருக்கிறாளென; இப்போதுஎன்னசெய்கிறாளென்றுகேட்க, வடகரையில் வஸ்திரத்தைக்களைந்துவைத்துவிட்டு ஜலத்திலிறங்கினாளென; இவ்வாறுசில கேள்விகள்கேட்டு விடைபெற்றபின்பு, கடைசியாய், இப்போதுஎன்னசெய்கிறாளென, அருகாமையில் வந்துவிட்டாளென்று சுப்பிரமணியன் சொன்னவுடனே, பார்வதியும் வந்துவிட்டாள். பெண்ணே, உன்மகன்ஒருசாஸ்திரஞ்செய்திருக்கிறான், அதைப்பரிசோதிக்க நான்கேட்ட இன்னின்னகேள்விகளுக்கு இன்னின்னவிடைகொடுத்தான், அவைஉண்மையாயிருக்கின்றனவாவென்று சிவன்கேட்க; பார்வதிசரிதானென்று ஒப்புக்கொண்டு, சற்றுயோசித்து, இந்தசாஸ்திரத்தினாலே நாம் நிர்வாணமாயிருந்தகோல முதலியவற்றைச் சுப்பிரமணியன்கண்ணாற்பாராமலே பார்த்துவிட்டானல்லவா? இப்படிப்பட்டசாஸ்திரம் உலகத்தில்வழங்கிவருமாயின் விபரீதமுண்டாகு மாதலால், அதுபலிக்காமற்போகக்கடவதென்று சபித்தாளென்றகதைசொல்லப்படுகிறது. இதனாலே தேவதா ஸ்திரீகளுக்கும் நாணமுண்டா யிருந்ததாகக் காணுகிறோம். ஆலயங்களிலே தேவதைகளுக்குப் பிராணப்பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதால் உயிருள்ளனவாகவே மதிக்கப்படுகின்றன. வடிவுடையம்மன்முதலிய விக்கிரகசொரூபங்களைப்பார்த்து, அம்மன்எவ்வளவு சுந்தரமாயிருக்கிறது! என்று பாதம் தொடையிடைமுதலிய பல அவயவங்களையும் வர்ணித்துத் தோத்திரஞ்செய்கிறார்களே. அப்படியிருக்க, அவ்வித ஸ்திரீதேவதைக்கு எண்ணெய்க்காப்பிட்டு மஞ்சள்நீராட்டி ஸ்நானஞ்செய்விக்க புருஷனாகிய பிராமணன் அமர்ந்திருப்பது ஒழுக்கந்தானோ! பிராமணர்கள்மாத்திரம் பார்க்கலாம், மற்றஸ்திரீபுருஷர்கள் மாத்திரம் பார்க்காதபடி திரைபோடப்படுகிறது. அந்தரங்கத்தில் நாயகியினிடத்து நாயகனுக்குண்டாயிருக்குஞ் சுதந்தரம் ஸ்திரீதேவதைகளிடத்து பிராமணர்களுக்குண்டாயிருக்கின்றதுபோலும். அபிஷேகஞ்செய்யும்போது பழயவஸ்திரந் தரித்துத்தான் செய்யப்படுகிறதென்று ஒருவேளைசொல்லுவார்கள். அப்படிச்சொல்லுவார்களாயின் அதற்குமுன்னும்பின்னும் நடக்குங்காரியங்களை யோசிக்கவேண்டும். கல்தச்சனே ஆதியில் வஸ்திரந்தரித்திருப்பதாக உருவமைத்திருக்கிறானென்று சமாதானஞ்சொல்லுவார்கள். பாவனையாக வஸ்திரம் ரவிக்கை இவற்றின்ஓரமாத்திரம்கோடுகாட்டி யிருப்பதேயல்லாமல், நித்தியவாலிபதேவதைகளாகையால் வாலிபப்பெண்ணிற்குரிய காம்புநரம்புமுதலிய சகல சிறுஅங்கங்களும் வெளிப்படையாகவே தோற்றுகின்றன. இப்போது சிலவிசாரணைசங்கங்களும் சித்தாந்தசபைகளும் ஏற்பட்டிருப்பதால் அப்படிப்பட்டவிஷயங்களைப்பற்றிச் சீர்திருத்தஞ்செய்ய யோசிப்பார்களென்கிற நம்பிக்கையினால் சூசனையாகக்காட்டினோம்.

கடிதம்.

வடவேங்கடந் தென்குமரியாயிடைத்
தமிழ்கூறுநல் லுலகந் தொறுஞ்செலீஇ
புகழ்நனிநிறுத்திய புலமைநனிசான்ற
எத்துணையோரு மிறும்பூதெய்திய
தத்துவவிசாரிணி யாந்தகையணங்கே
யித்துணையான்சொல் லின்னுரைகேள்மதி.

மணிநெடுங்கடல்சூழணிநிலந்தனிற் சின்னாட்பல் பிணிச்சிற்றறி வுளவாகிய வான்மாக்கள் விளிவுறுங்காறுங், கூடியவளவு சுகத்தினை நுகர்ந்திருத்தல் வேண்டுமென்பதனையே, கடைப்பிடித் தக்கருத்தினுக்கிணங்க வலகிலாக்கோட்பாடுகளை நிகழச்செய்த நம்முன்னோர் மதியேமதி!!!அதனையீண்டு—

"சிந்தையிற் சிறியேன் கூறத்தொடங்குதல் சேடன்சூடு முந்தைவையகத்தை நாங்கூழ்முடிப்ப லென்றடுத்தவாறே"

அன்னோரது கோட்பாடுகளி னிலக்கணத்தையு மவற்றால்விளையு ▲ற்பயன்களையும்,

"அளவுகூடவுரைப்பரிதாயினும்
அளவிலாசைதுரப்பவறைகுவேன்."

சராசரங்களனைவிற்குந் தோற்றமுமீறுமாய் நிற்குமொருவன் முக்காலத்தினுமிலனெனும் வாய்மையினைச் சில மூதறிஞர்,கரதலாமலகமெனக் கண்டறிந்தேமெனக் கழறுவராயினும், எவ்வுயிர்க்குமுயிரா மொருவனுளன்; அவனியக்க நாமியங்கும் பாவைகளெனப் பகர்வதால் விளையுந்தீமை யிஃதெனவுணர வல்லேனல்லேன்.

இந்நானிலத்தொருவன், தன்சுயமதி நுட்பதிட்பத்தினாலேயே "யானைபெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்சேனைத்தலைவ" னாய்ச் சங்கநிதி பதுமநிதிகளையுமொருங்கேபெற்று, "கண்ணிற்சொலிச்செவியி னோக்குமிறைமாட்சி" தனைக், கையாளப் பெற்றானாயினும், செல்வச்செருக்குக் கன்னோனிரையாகுத லியல்பன்றோ? அவ்வண்ணமவன்பெற்ற செல்வச்செருக்கினாற் கண்ணாருத்தெரியா தொளிமழுங்குழி;

"வண்டுளருந்தண்டுழாய்மாயோனிறுமாப்பும்
புண்டரிகப்போதுறையும்புத்தேளிறுமாப்பு
மண்டர்தொழவாழுன்னிறுமாப்புமாலால
முண்டவனைப்பூசித்தபேறென்றுணர்ந்திலையால்."

என, வன்னோன்செருக்கற்று அச்சோ! முன்வினைக்கீடாக நம்பன் எளியேற்கிவ்வாழ்வைத் தந்தனன்; தமியேனதாற்றலு மோராற்றலா? என்றுவல்லேபரிதபித்து அடக்கத்திற் கோரரியகலமாகியு நாட்டிற்கோரரிய கலனாகியு மன்னோன் திகழ்வானன்றோ?

இங்ஙனமே, யொருவன் பற்பல துன்பங்கட்கிலக்காகி 'புலைப்பெய்தடுவது போலுந் துயரெய்து' ங்காலத்து மருளாள னொருவனாலியக்கப் படுகின்றனன் என்று ஒல்லே நினைப்பூட்டிக் கொள்ளுவதா லவனடையும் பயன்பளிங்கற்றே—

"மல்லலாக்கமதாக்குழிமகிழ்வதுமகிழா
தல்லலாக்குழியழுவதுமறிபவர்க்கறிவோ
மெல்லவானகத்தேற்றினும்வெய்யதீநிரயச் [வாம்."
செல்லல்வீழ்க்கினுஞ்சிவமெனத் தெளிவதே தெளி

"துன்பம்வேட்டலசூழ்வதுசூழுங்காலதுபோ [லின்
லின்பமென்பது முயன்றுழலாது வந்தெய்தும்." ஆத

"அஞ்சிநிறபதாலழித்தழித்தியற்றுமோவமல [மை
நெஞ்சுநொந்துநொந்தாண்மையையிழப்பதோ நிலை
வஞ்சிபாகனையிம்மையிற்பூசிக்கின்மறுமைச்
சஞ்சிதாதிபூ வினைகளுந்தழற்படுஞ்சருகாம்."

"எடுத்தகாயத்தாலியாவர்க்குமின்பதுன்பங்கள்
விடுத்துநீங்குங்கொல்மண்ணுடன்விண்முதல்யாவு
நடித்தபாவையப்பாவைக்குநிருத்தனெம்பெருமான்
படுத்தியாட்டுறும்பாசமேயிருவினைப்பாசம்."

இத்தகுதியதான கோட்பாடுகளைத் துயராக்கினியிற் கருகுமொருவற் கெடுத்துரைத்தலு மன்னோனக்கணமே மகிழ்ச்சியுத்தியின் மூழ்கி மனோதிடமுறுவானென்பதற்கையமியாது? மேற்கண்டகோட்பாடுகளின்வாய்மையினை நிலைநாட்டிச்சாதிப்பான் நாயேன் வெளிவந்திலன்காண்க. மேலையவற்றை யனுசரித்தொழுகுதலால் விளையும்பய னளவிகந்தனவென்பதே யறிவிலேன் கொள்கையென்க. ஆகலின், ஔவைதன் "தொன்மை மறவேல்"என்னுமூதுரையை நம்மனோர்கடைப்பிடித்திணங்குவராக.

28th September
1879

T. B.

விவேகிகளே! மேற்கடிதத்தில் ஆங்காங்கு கண்ணுற்றவஞ்செவியுற்றவமாகிய சொற்களைப் பொறுக்கிச்சேர்த்து சொல்வி ரயஞ்செய்திருக்கிறதென்றும், நியாயவாயிலாய் நிலைநாட்டப்பட்டவிஷயஞ் யாதேனும் இருக்கிறதென்றும் உணர்ந்துகொள்வீர்களாக. இனி இத்தகைய கடிதங்களுக்குத் தத்துவவிசாரிணி இடமாகாது.—ED.

இலௌகிகம்.

இலௌகிகிகள் ஒவ்வொருமதத்தையும் கொள்கையையும் நம்பிக்கையையும்நாசஞ்செய்கின்றார்களே யல்லாமல் புதிதாய் ஒன்றையும் சாதிக்கின்றார்களில்லையேயென்று அனேக வைதிகிகள் முறையிடுகின்றார்கள். களர்நிலத்தில் விதைவிதைத்தால் விளையுமா? பழைய சுவர்மேல் புதுசுவர் எழுப்பினால் பாரந்தாங்குமா? நம்பிக்கையாகிய திரைப்புறத்திருப்பவர்களுக்கு நியாய ஒளிகாட்டினால் தோன்றுமா? செவிடன்மாட்டுச் சங்கொலி பயன்படுமா? கலலாமையாகிய களர்போக்கி, கடினசித்தமாகிய கல்லையகழ்ந்து, காய்சினமாகிய கரம்பு திருத்தி, நியாயநூற்போத எருவிட்டுப்பதமாக்கி, விதைவிதைத்தாலன்றோ விர்த்தியாகும்? பழைய சுவரைப் பாழாக்கி, பாரகழ்ந்து சுவர்வைத்தாலன்றோ பாரந்தாங்கும்? நம்பிக்கைத் திரையை நீக்கி, நியாயவொளி காட்டினாலன்றோ நன்றாய் விளங்கும்? ஆயினமையின் சங்கூதுவதற்குமுன் செவிட்டைப் போக்க வேண்டியது இலௌகிகி கடனாதலால், அவ்வாறு செய்யவேண்டியதே ஆவசியகமென்க. நாம் ஒவ்வொருவரும் கையாண்டுவரும் சமயமும் கொள்கையும் மதமும் நமக்கு தொன்றுதொட்டு நம்மவரால் போதிக்கப்பட்டுள்ளதா அல்லது நாமே யூகித்து கைகொண்டதாவென்று யோசிக்குமிடத்து, போதிக்கப்பட்டுள்ளதென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வாறே ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் கொள்கையையே தம்மவர்க்கு போதித்துள்ளார். ஆயினமையின் ஒருவர்பிறக்கும்போதே அவர் கொள்கையும் உடன்பிறக்கவில்லை. பிராமணப் பிள்ளையை கிறீஸ்தவன் வளர்த்தால் அக்குழந்தைக்கு வயதுவந்தகாலத்தில் கிறீஸ்துமதத்தையே கொண்டாடும். இன்னும் இவ்விந்து தேசத்திலேயே ஒன்றுக்கொன்று வெதிரேகமான அனேகமதங்களுண்டு. ஒருமதம் கொலைசெய்யச்சொல்கிறது; ஒருமதம் கொலையை வெறுக்கிறது. ஒன்று கல்லை வணங்கச் சொல்கிறது; ஒன்று நதியைத் தொழச் சொல்கிறது. இவ்வாறே எண்ணிறந்த மதபோதனைகளுண்டு. இவைகளை யெல்லாம் அபிமான மொழித்து பற்றற்ற சிந்தையோடு நோக்குமிடத்து மனித யேற்பாடாகத் தோன்றுகின்றதா? அல்லது ஓர் முதல்வர் ஏற்பாடாகத் தோன்றுகின்றதா? ஓர் கடவுள் ஏற்பாடாயின் எங்கும் ஒருபடித்தாக வல்லவா இருத்தல் வேண்டும்? பகுத்தறிவுடைய விவேகிகள் பற்றற்ற சிந்தையோடு யாதொரு அபிமானமு மில்லாமல் விசாரிக்க வெளிவந்தால் அவர்களைப் புறத்தில் தூஷிப்பவர் விவேகிகளா? இவ்வாறு செய்தல் தக்கோர் செய்கையன்று. மானுஷீகமென்னும் மாணிக்க வொளி சுடர் விட்டுப் பிரகாசிக்கவேண்டில், அபிமானமென்னும் அகப்பற்றை யொழித்து, வைராக்கியமென்னும் விழியிருள் போக்கி, மனமாசென்னும் தூசுநீக்கி, விசாரசித்தமென்னும் விழிதிறந்து ஒவ்வொருவரும் வெளிவந்து விசாரிக்கவேண்டும்.

இதற்குஎதிர்மொழி.

எத்துணையோரு மிறும்பூதெய்திய
தத்துவவிசாரிணி பத்திராதிபரே.

வந்தனம்.

நிகழ்ந்த செப்டம்பர் 28-ம் திகதிதனி லடியேன் தீட்டிவிடுத்த கடிதத்திற் குறிக்கப்பட்டுளவாய் சில கோட்பாடுகளை யனுசரித்தொழுகுதலால், விளையும் நற்பயன்க ளளவிகந்தன வென்பதனை, நியாயவாயிலாயெடுத்து அடியே னன்கு கூறியுந் தங்கட்கவை புலப்பட்டில போலும். ஆயினுந் தங்கள் பத்திரிகையாற் பண்புற்றுவருஞ் சமரச சன்மார்க்க சிகாமணிகளிற் சிலராயினு மவற்றை யுணர்ந்தே யிருப்பரென்பதற் கையமில்லை, (நிகழ்ந்த பானுவாரப் பத்திரிகையில்) "இலௌகிகம்" என்னுந் தலைப்பெயரினைச் சாற்றித் தாங்கள் வரைந்துவிடுத்த, இரண்டொரு கொள்கைகளைப்பற்றிய வினாக்களுக்காயினுந் திருவருள்சுரந்து தாங்கள் "ஆங்காங்கு கண்ணுற்றவுஞ் செவியுற்றவுமாகிய சொற்களைச்சேர்த்து சொல்விரயஞ்" (a) செய்யாது, சுயமதிநுட்பதிட்பத்தினாலேயே, நியாயவாயிலாய்த் தக்க விடையளிப்பீரென, மன்றாடுகின்றனன்.

மதங்களனையவு மனிதரது ஏற்பாடுகளேயொழிய "ஒரு முதல்வ ரேற்பாடாகத்தோன்ற" வில்லையென்பது சத்தியமே, தாங்களறைவதுண்மையே. (b) 'சைவசமயமே சமய'மென்று 'திருவாய்மலர்ந்தருளிய தாயுமானவரும்' சமயாதீதப் பழம்பொருளென்று கடவுளைக்குறிக்கின்றனர்.

சமயங்கள் கற்பிதமானவைகளாயினு மவற்றை யனுசரித் தொழுகுதலால் விளையும்பயன் நன்மையா? தீமையா?

தருக்காதி நியாயசாத்திரங்களிலும், பிரிதிவியாதி பூதசாத்திரங்களிலும், தேகான்மமானத பதார்த்த சொரூப லக்ஷணங்களிலும், முறையே பாண்டித்தியமுற்றும், வேதாகம விசாரணையிலு முழுதொருங்குணர்ந்த திலகர்போன்ற நும்போலியரோ சமயமென்பதுஞ் சமயாதீதப் பழம்பொருளென்பதும், கற்பிதமானவையென்னும் வாய்மையினை யறியவல்லிர். இவ்வுலகத்திற் கோடானுகோடி யான்மாக்கள், மேற்காட்டிய மானத பதார்த்த சொரூபலட்சணாதிகளிற் சொர்ப்பனத்தினும் பயின்றிராரோ! பயில்வதற்கு இன்றியமையாதனவாகிய மதிநுட்பந் தேகதிட முதலியவற்றை யடைந்துமிலரோ! அன்னோர்க்காயினும் கற்பிதமாயுண்டாக்கப்பட்ட சமயங்களும் சமயத்திற் கூறப்பட்டுள்ள தெய்வங்களை வழிபட்டொழுகுதலும் நற்பயனை நல்காவா?

"(c) நெல்லுக்குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்குமுண்டா" மாதலின், ஒவ்வொரு ஏற்பாட்டிலும் தீமையு நன்மையும் பிரிவறவுள்ளவாதலின், மூதறிஞர் அவ்வேற்பாட்டில் நன்மைமிக்கிருப்புழி யதனை யங்கீகரித்தலும் தீமைமல்கிநிற்புழித்திரஸ்கரித்தலுஞ் செய்யாநிற்பர். ஓர் தந்தை, தன்னரியமகவு கிணற்றின்மருங்கேகுதலை விலக்குவான் கருதி, யாண்டுளவோர் கயிற்றினையிஃதொரு கொடியவரவென வக்குழவிக்கன்னோன் வற்புறுத்திச் சாதிப்பானாயி னம்மகவு அக்கிணற்றருகே யேகாதுதப்பி யுய்யுமென்பதற்கையமியாது? அக்குழவி யச்சூட்சியால் நற்பயனை யடைகின்றிலதா? இங்ஙனமே, மனச்சாட்சிக்குநேர்மாறாகவாயினு மொன்றைக்கழறி யேனையோர்க்குச் சுகத்தினையூட்டுவதே நன்மைகடைப்பிடித்தொழுகுந் திண்ணறிவாளரதிலக்கணம். இல்லை யென்பதை யுண்டென்றறைவதாற்றீமை விளைதலில்லையே. இக்கருத்தையுள்ளடக்கித்தான், மானிடசுகாதார வேதுக்களிலும் பிரஜாரோக்கிய பிரஜானுகூல பிரவர்த்தனாதிகளில் நாட்டம் வைத்தருளிய நம்முன்னோர், சமானாதிக மிலையென ஈண்டுநிலவிய ஆத்திகத்தை நிகழச் செய்தனர் காண்க.

(இன்னும்வரும்.)

T. Balasundrum Mudelliar.

[(a) உன்மத்தரன்றோ சொல்விரயஞ் செய்பவர் அவ்வாறு செய்த லெமக்கியல்பன்று.

(b) மகம்மதியர் வாளொருகையிலும் வேதமொரு கையிலுந் தாங்கிப் புறச்சமயிகளை நரவேட்டை யாடியதும், கிறீஸ்தவர் (மேரி என்பவள் அரசாண்டகாலத்தில்) ஏனையோரை வாளிற்குந் தீய்க்கும் இரையாக்கினதும், சைவர் இதக்கமறுத்து க்ஷமணாதி புறச்சமயிகளை கழுவேற்றியதும், புத்திர வாஞ்சையென்பதுபரமாணுப்பிரமணமேனுமில்லாது இரணியன் தன்புத்திரனாகிய பிரகலாதனை பற்பல சகிக்கலாற்றா ஆக்கினைகளுக்கு உள்ளாக்கியதும், இந்துக்கள் பெற்ற பிள்ளையைக் கங்கையிலெறிந்ததும், அனேகர் ஜகனாதத் தேர்ச்சக்கரத்தில் வலியச் சென்று நசுக்குண்டு [illegible]தும், இன்

னன பலவும் முன்னோர் ஏற்படுத்திய மதத்தால் விளைந்த பிரயோஜனங்களன்று?

(c) நெல்லிற்கு உமியிருப்பதுபோல ஒவ்வொன்றிலும் நன்மைதீமை யிருக்கின்றதெனின், நெல்லினது உமிபோக்கி அரிசியைக் கொள்வதுபோல் குற்றத்தை நீக்கி குணத்தைக் கொள்ளுவதல்லவா மானுஷீகம்? அதிலும் குற்றமில்லாததையே முயன்று தேடிப் பெறுவதன்று நன்மானுஷிக விவேகப்பேறு? சமையத்தை புணர்த்துவதுபோல சாத்திரங்களை யுணர்த்துதல் கூடுமே.---ED.]

வர்த்தமானம்.

பங்காளத்தில் சமிஸ்கிருத பாடசாலைகள் மாணவாயிலே எட்டிப்பார்க்கிறதுபோலிருக்கிறதென்றும், நோய் பிடித்த அநேக பாடசாலைகளை உயிரோடு வைத்திருப்பதற்கான வெள்ளி மாத்திரை கொடுக்கும்படி கவர்ன்மெண்டாருடைய சகாயங்கேட்டுக்கொள்ளப்பட்டதென்றும், ஆனால், சமிஸ்கிருத பாடசாலைகளுக்கு வருஷத்திற்கு 12000 ரூபா சகாயஞ் செய்யவேண்டுமென்று பங்காளத்து பப்ளிக் இனிஸ்திரக்ஷன் டைரெக்டர் அபிப்பிராயங்கொண்டிருந்தபோதிலும், தற்காலம் பணமில்லாமையினால் சகாயஞ் செய்யக்கூடாமையா யிருப்பதுபற்றி பணவுதவியாகும்போது கொஞ்ச சகாயஞ் செய்வதாய் கவர்னர் ஜனரலவர்கள் லெப்டனண்டு கவர்னரவர்கள் டைரெக்டரவர்களாகிய இவர்களுடைய அபிப்பிராயங்கள் சர்க்கார் ரிகார்டில் எழுதப்பட்டிருக்கிறதென்றும், கேஜட் பத்திரிகையினால் தெரியவருகிறது.

பெங்களூர்சிவில் மிலிட்டேரி ஸ்டேஷனில் இதுவரையில் வரும்படிவரி யில்லாதிருந்தது. சுதேச சமஸ்தானங்களில் வியாபாரமுதலிய தொழில்கள் நடத்தினபோதிலும், அப்படிப் பட்டவர்களுக்கு வரும்படி வரி ஆக்ட்டு சம்பந்தப்படவேண்டியதென்று பிரதெச கவர்ன்மெண்டார் நிபந்தனைகள் செய்திருப்பதால், இனி சர்க்கார் வருப்படி அதிகமாகும்.

ஜோலார்பேட்டையில், (மெயில்) தபால் உத்தியோகஸ்தருக்கும் ரெயில்வே உத்தியோகஸ்தர்களுக்கும் விவாதமுண்டாயது. ஜோலார்பேட்டையில் மெயில் திரெயின் சிலநிமிஷம் தாமசப்பட்டதால், தபால் உத்தியோகஸ்தர் புறப்படச் சித்தமாயிருக்கிறாரவென்று விசாரிக்காமல், கார்டு வண்டித்தொடரை நடத்தினார். சில கையெழுத்து வாங்கவேண்டியிருந்ததற்சாக நின்றிருந்த தபால் உத்தியோகஸ்தர் என்ன அவசரமிருந்தபோதிலும் சர்க்கார் தபால் வேலையை முக்கியமாய்ப் பார்க்கவேண்டியதென்று அந்த வண்டித் தொடரைப் பின்னுக்குக் கொண்டுவரச்சொல்லித் தன் வேலையைச் சீக்கிரமாய் முடித்துக்கொண்டு ஏறிச் சென்றனர். ரெயில்வே திராவிலிங்போஸ்டாபீஸ் சூபரின்டெண்டாண்டானவர் ரெயில்வே உத்தியோகஸ்தர்கள் செய்த ஷை காரியத்தைக்குறித்து ரிபோர்ட்டு பண்ணினார். இது தமாஷான வழக்குத்தான். வண்டித்தொடர் இரண்டொரு நிமிஷம் தாமசப்படக்கூடா தென்பதுபற்றித் தபாலைப் பிந்திவிட்டுவிடுவது கூடாமையே; தபால் உத்தியோகஸ்தர் அதிகதாமசப்படுத்தி, பயணக்காரர்களையும் ரெயில்வே உத்தியோகஸ்தர்களையும் சங்கடத்துக்குள்ளாக்குவதும் கூடாமையே.

பாம்பே முனிசிபல் கூட்டத்தார் மகாராணி யவர்களுடைய ஜூபிலிவருஷோற்சவகாலத்தில் ராணியாரவர்களுக்கு சுபங்கொண்டாடுவதற்காக விண்ணப்பம் தயார் செய்யவேண்டுமென்றும், முனிசிபல் கட்டடங்களை சோதிப்பிரகாசமாக்குவதற்காகவும் தெருக்களை அலங்கரிபபதற்காகவும் சந்தை வைப்பதற்காகவும் ரூ 15000 சேகரிக்கவேண்டுமென்றும், ஜூபிலியின் ஞாபகார்த்தத்துக்கெனறே நிரந்தரமான ஒருவிஷயத்திற்காக ரூ 80,000 அளிக்கவேண்டுமென்றும் ஒற்றுமையான அபிப்பிராயங்கொண்டார்கள்.

நமது மகாராணி யவர்களுடைய ஆளுகையின் ஐம்பதாம் வருஷம் வருகிற ஜூன்மீ 20உயோடு முடிவாகிறது. அன்றையத்தினந்தான் இங்கிலாந்துமுதலிய பிரதேசங்களில் ஜூபிலி வருஷோற்சவங் கொண்டாடப்படுமாம். அப்படியிருக்க, இந்தியாவில்மாத்திரம் நான்குமாசம் முன்னதாக வருகிறபிப்ரவரிமீ 16உ கொண்டாடும்படி உத்தேசிக்கப்படுகிறது. மற்ற ராஜதானிகளைப்பற்றி யோசிக்கவேண்டியநிமித்தமில்லாவிட்டாலும், சென்னை ராச்சியத்திலோ, இப்போதுதான் நேரிட்ட அநியாய மரணங்களினால் பட்டணத்திலுமல்லாமல் வெளிகளிலும் குடிகள் துயரத்தில் மூழ்கியிருப்பதுமன்றி, அக்கினிவாதை யடைந்தவர்களில்பிழைக்கிறவர்கள் சிலராயும் மரணமடைகிறவர்கள் பலராயும்இன்னும் நடந்துவந்துகொண்டிருக்கிற இந்நாளிலே குடிகள் யாவரும் ஒன்றுகூடி சந்தோஷங்கொண்டாடத் துணியமாட்டா... துணிவார்களாகில் அனுசிதந்தான். ஆனால், என்னகாரணத்தினாலோ முந்தி நடத்துவிக்க கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமுண்டாயிருக்கின்றதுபோலும்:

ஹாவியான் ராச்சியத்திலே பணமுட்டுப்பாடு மிதமியாயிருக்கிறது. வரவுக்கு செலவு அதிகம். சர்க்கார் கஜானாவில் பணம்வைத்திருக்கவேண்டியதற்காகக் கடன்வாங்க முயற்சிசெய்யப்படுகிறது. கடன் கொடுப்பவர்களுக்கு ஐவேஜுராசாவின் பத்திரம் தவிர வேறொன்றுமில்லை. அந்த தீவுகளிலுள்ள குடிகள் மொத்தம் 80,000 பேர்தான்; அவர்களில் வெள்ளைக்காரர்கள் 1,5000. ராஜா தமது ஐம்பதாம் வயசு ஜன்மதினத்தை ஜூபிலிவருஷமாகக்கொண்டாடினார்: அவர் ஐம்பது வயசு பிழைத்திருந்ததே அதிசயம்போலும்.

ஆந்தமன்தீவிலே பத்து வருஷத்திற்குமுன் கவர்ன்மெண்டு தேயிலை தோட்டத்திற்கு $3\frac{3}{4}$ ஏகரா நிலம் வளைக்கப்பட்டது. சென்ற வருஷத்திலே $288\frac{1}{2}$ ஏகரா விஸ்திரணமாயிற்று. சென்றவருஷத்தில் தேயிலை உற்பத்தி 26,600 பவுன். விற்பனையானது 23,273 பவுன், நிகர விற்பனைத்தொகை ரூ 11,048.

அறிக்கை.

நமது மெம்பர்களும கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச

தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே ஒருஅணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி----என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை புரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ '3— 0—0

வெளி ,, ,, —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வானசு.)		Rs.	A.	P.	வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்

சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி

307 - வது நம்பர் வீட்டில்

பு. முனிசுவாமிநாயகருக்கும்;

1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,

இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,

வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்

மதிறாஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி

மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்

அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.